**ஊடக அறிவித்தல்**

**பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை – 2026**

**பாடசாலை, தனிப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கான விண்ணப்பம் கோரல்**

அரசாங்க, தனிப்பட்ட பாடசாலைகளில் தரம் 12 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்குரிய 2026 ஆம் ஆண்டிற்குரிய பொதுத் தகவல் தொழில்நுட்பப் (GIT) பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 22.06.2026 ஆம் திகதி தொடக்கம் 16.07.2026 ஆம் திகதி வரை நிகழ்நிலை முறைமை ஊடாக பெற்றுக்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

02. சகல விண்ணப்பதாரிகளும் தமது அதிபர்/பாடசாலைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்பி வைத்தல் வேண்டும். அதற்கமைய அதிபர்/தனிப்பட்ட பாடசாலைத் தலைவர்களால் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic ஊடாக பிரவேசித்து உரிய அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து அதற்கமைய நிகழ்நிலை (online) முறைமை ஊடாக மட்டுமே விண்ணப்பிக்க முடியும். **மேலும் தனிப்பட்ட முறையில் விண்ணப்பிக்க முடியாது.**

03. மேற்படி பரீட்சைக்காக அரசாங்க, தனிப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயனர் பெயர் (User Name) கடவுச்சொல் (Password) என்பவற்றைப் பயன்படுத்தி விண்ணப்பிக்க முடியும். இதன் அச்சுப்பிரதியை தேவைப்படும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிப்பதற்கு தம்வசம் பாதுகாப்பாக வைத்திருக்கவும்.

04. 2026 ஆம் ஆண்டில் தரம் 12 இல் கல்வி பயிலும் மாணவர்கள் (2027 ஆம் ஆண்டு க.பொ.த. (உ.த)ப் பரீட்சைக்கு முதன்முறையாக தோற்றவுள்ள மாணவர்கள்.) மட்டுமே இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

| |
|---|
| தனிப்பட்ட பாடசாலை மாணவர்களின் சகல தகவல்களும் தரவுத்தளத்திற்குள் உள்ளடக்கிய பின்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். **பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் புதிதாக மாணவர்களை உள்ளடக்க முடியாது.** |

05. இது தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடாக தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

| | |
|---|---|
| நேரடி தொலைபேசி எண் | - 1911 |
| தொலைபேசி எண்கள் | - 0112784208, 0112784537, 0112786616 |
| தொலைநகல் எண் | - 011 2784422 |

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்